Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 141

சனிக்கிழமை
16 ஏப்ரல் 2022

சித்திரை 3 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ.40



சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
சீரணி, சண்டிலிப்பாய்.
ஆலய இரதோற்சவ சிறப்பிதழ் – 2022
[பக்கம் 6-11]

## யாழ். நகரில் நாளை தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 16
ஜனநாயகத்துக்காக ஒன்றிணைந்த இளையோரின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நக 15 ➤



காலிமுகத்திடலில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் உணர்வெழுச்சிப் போராட்டத்தில் நேற்று இரவும் பல்லாயிரக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

## பஸிலுக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 16
முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் 15 ➤



கொதிநிலையில் காலிமுகத்திடல்

# போராட்டக்களம் சென்று பேராதரவு வழங்குங்கள்!

### தமிழ் இளைஞர்களிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஏப். 16
அரசிலிருந்து அனைத்து ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களையும் பதவி விலகக் கோரி கொழும்பு - காலிமுகத்திடலில் இளைஞர்கள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கிலிருந்தும் இளைஞர்கள் சென்று முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 15 ➤

## ராஜபக்சக்கள் அனைவரும் கூண்டோடு விலகவேண்டும்

### 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இளைஞர்கள் நேற்று ஊடகச் சந்திப்பு

கொழும்பு, ஏப்ரல் 16
கொழும்பு காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தின் ஏழாம் நாளான நேற்றையதினம் 5 அம்சக் கோரிக்கைகள் 15 ➤






கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் அரசாங்கத்துக்கு எதிரான இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதன் போது நேற்றிரவு இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரியவும் போராட்டக் களத்தில் இணைந்து கொண்டார். (ம)

## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை; உணர்வெழுச்சியுடன் நினைவேந்துக!

யாழ்ப்பாணம், ஏப். 16
தமிழினம் கருவறுக்கப்பட்ட நாளான மே மாதம் 18 ஆம் திகதியை பேதங்கள் அனைத்தையும் தவிர்த்து உணர்வெழுச்சியுடன் நினைவுகூர்வதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண் 15 ➤

## புதிய அமைச்சரவை திங்கள் பதவியேற்பு?

கொழும்பு, ஏப். 16
எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை பதவியேற்க வாய்ப்புள்ளதா 15 ➤

## மீண்டும் மின்வெட்டு!

கொழும்பு, ஏப். 16
இன்றுமுதல் மீண்டும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்ப 15 ➤

### யாழ்ப்பாணத்திலிருந்து
## இந்தியா செல்வதற்கு முற்பட்ட ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு தப்பிச்செல்ல முற்பட்ட ஐந்து பேர் கடற்படையால் நேற்றுக் 15 ➤

## கைவிசேடத்தால் வந்தது வினை!

### வெளிநாட்டில் இருந்து வந்தவர் மீது இரும்புக் கம்பியினால் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 16
கைவிசேடம் கொடுக்க மறுத்தவர் இரும்புக் கம்பியால் தாக்கப் 15 ➤

## எரிபொருளுக்கு இனி வரையறை

கொழும்பு, ஏப். 16
எரிபொருள் நிரப்பு தொடர்பில் சில வரையறைகளை அரசாங்கம் விதித்துள்ளது. இந்த 15 ➤

## நீர்வெறுப்பு நோயால் குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 16
தெருநாய் மற்றும் பூனையின் நகக்கீறல் காரணமாக நீர்வெறுப்புக்கு உள்ளாகி குடும்பத்தலைவர் 15 ➤

## ஈஸ்டர் தாக்குதல் நினைவுநாள் சிறப்பு ஆராதனைக்கு ஏற்பாடு!

கொழும்பு, ஏப். 16
ஈஸ்டர் தாக்குதல்கள் இடம்பெற்று எதிர்வரும் 21ஆம் திகதியுடன் மூன்று ஆண்டுகள் நிறைவடைவதை முன் 15 ➤

## விபத்தில் ஒருவர் பலி

முல்லைத்தீவு, ஏப். 16
முள்ளியவளை களிக்காட்டுப்பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.16
தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 40 ஆவது ஆண்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.(க-இ)



## எரிவாயு உற்பத்தி வழமைக்கு

கொழும்பு,ஏப்.16
எரிவாயு உற்பத்தி நாளை மறுதினம் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.
உலக வங்கியின் உதவியுடன் 10 மில்லியன் டொலர் பெறுமதியான எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.
எதிர்காலத்தில் 8 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டுக்கு வழங்கப்படும் என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.
அதேவேளை எரிவாயு விலைத் தளம்பல், போதிய நாணயக் கடிதங்கள் வழங்கப்படாமை, பண்டிகைக் காலத்தில் தேவை அதிகரிப்பு, எரிவாயு கையிருப்புகள் தீர்ந்தமை உள்ளிட்ட காரணங்களால் நாட்டில் எரிவாயுத் தட்டுப்பாடு தொடர்ச்சியாக ஏற்பட்டிருந்தது. (க-இ)

## புத்தாண்டில் தகராறு; 12 பேர் காயம்

வவுனியா, ஏப். 16
வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தகராறுகளில் 12 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஓ-14,110)


# பிரதி சபாநாயகர் பதவி துறப்பு

கொழும்பு, ஏப். 16
**தான் வகிக்கும் பிரதி சபாநாயகர் பதவியை எதிர்வரும் 19 ஆம் திகதி இராஜினாமா செய்யவுள்ளதாக அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார் சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய.**

ருவன்வெல்ல பகுதியில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை சுதந்திரக்கட்சி கடந்த 5 ஆம் திகதி மீளப்பெற்றுக்கொண்டது.
நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப்போவதாகவும் அறிவித்தது.
இந்த நிலையில் சுதந்திரக்கட்சி உறுப்பினரான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, பிரதி சபாநாயகர் பதவியை துறக்கும் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். ஏப்ரல் 5 ஆம் திகதி மாலை ஜனாதிபதிக்கும், சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது பிரதி சபாநாயகர் பதவியென்பது, சுயாதீனமானது. எனவே, அந்தப் பதவியில் தொடர்ந்து நீடிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். இந்தக் கோரிக்கையை, இரு நிபந்தனைகளின் அடிப்படையில் பிரதி சபாநாயகரும் ஏற்றுக்கொண்டார்.
ஏப்ரல் மாத இறுதிவரைதான் பதவியில் நீடிப்பேன்.
அந்தக் காலப்பகுதியில் பிரதி சபாநாயகருக்கான வரப்பிரசாதங்கள் எதனையும் அனுபவிக்கமாட்டேன். இது தொடர்பில் கணக்காய்வு நடத்தப்படவேண்டும். எனினும், சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சாந்த பண்டாரவை ஆளுங்கட்சி வளைத்துப் போட்டு, இராஜாங்க அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளது. இதனால் சுதந்திரக்கட்சி அரசுமீது கடுப்பில் உள்ளது. இந்த நிலையிலேயே தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு 19 ஆம் திகதி பதவி துறப்பேன் என்ற அறிவிப்பை அவர் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறியவை வருமாறு,
"மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஆளுந்தரப்புக்கு புரியும் பாஷையிலேயே எடுத்துரைப்பதற்காகத்தான் அனைத்துப் பதவிகளையும் துறந்தோம். அந்த வலியுறுத்தலை தொடர்வதற்காக பிரதி சபாநாயகர் பதவியை 19 ஆம் திகதி துறப்பேன்.
அதன்பின்னர் பிரதி சபாநாயகரை தெரிவுசெய்ய வாக்கெடுப்பு நடத்த வேண்டிவரலாம்.
அது தற்போதைய நெருக்கடியை மேலும் வலுப்படுத்தலாம், என்றார். (ஓ-44)

# லிட்ரோ தலைவர் பதவி துறப்பு

கொழும்பு, ஏப். 16
லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெஸார ஜெயசிங்க பதவி விலகியுள்ளார்.
தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.
லிட்ரோ காஸ் நிறுவனத்தில் ஊழல் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதை உறுதி செய்வதற்காக எடுத்த நடவடிக்கைகளை அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி ஆதரவை வழங்கியபோதிலும் உரிய அமைச்சரோ நிதித்துறை அதிகாரிகளோ ஆதரவை வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு உதவாமல் பிழையான அறிக்கைகளை வெளியிட்டனர். இந்தக் குறுகிய இலாபமீட்டும் அரசியல் கலாசாரம் லிட்ரோ நிறுவனத்தில் மாத்திரம் காணப்படும் விடயமல்ல. மாறாக அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.
இவ்வாறான சூழலில் என்னால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது எனத் தெரிவித்துள்ள தெஸார ஜெயசிங்க 14 ஆம் திகதி முதல் பதவியைவிட்டு விலகுவதாகத் தெரிவித்துள்ளார். (ஒ-இ)



## டீசலைப் பதுக்கிய சந்தேகநபர் கைது

கிளிநொச்சி,ஏப்.16
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் டீசலைப் பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில், 300 லீற்றருக்கும் அதிகமான டீசல் கைப்பற்றப்பட்டது.
அதனை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். (க-113)

## வீடு புகுந்து தாக்குதல் ஒருவர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.16
வீட்டுக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டவர்கள், குடும்பஸ்தர் மீது வாள் வெட்டுத்தாக்குதலை மேற்கொண்ட பின்னர், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்தவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
வீட்டின் மீது பெற்றோல் குண்டை வீசி தாக்குதலை மேற்கொண்டவர்கள், வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் வீட்டில் இருந்த பொருள்களையும் அடித்து நொருக்கி அட்டகாசம் புரிந்துள்ளனர். வீட்டில் இருந்த பெண்களையும் வாளைக் காட்டி அச்சுறுத்தி, அவர்களின் பெறுமதி வாய்ந்த கையடக்கத் தொலைபேசிகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (க-27)

## ஓட்டோவுக்கு தீ வைப்பு 2 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.16
வீடு புகுந்து முச்சக்கர வண்டிக்குத் தீ வைத்தனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
மானிப்பாய் அந்திரான் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி இரவு சுந்தரலிங்கம் தனுராஜ் என்பவரது வீட்டுக்குள் அத்துமீறி உள்நுழைந்த அறுவர், அங்கு நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் மீது பெற்றோல் ஊற்றி தீயிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.
மானிப்பாய் பொலிஸாரது மேலதிக விசாரணைகளில், 22 வயது மற்றும் 23 வயதான இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.(க-125)

# கொழும்பு திரும்புவோருக்கு மேலதிக பஸ் சேவைகள்

கொழும்பு, ஏப். 16
புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் கொழும்புக்குத் திரும்புவதற்கு பஸ் சேவைகள் கூடுதலாக ஏற்படுத்தப்படவுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. இதற்கமைய 200 பஸ்கள் கூடுதலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார்.
அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமைக்குள் பயணிகள் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும் என்றும் தெரிவித்தார். இதேவேளை, கிராமங்களுக்குச் சென்ற பயணிகள் கொழும்பு திரும்புவதற்காக நாளை முதல் பல விசேட ரயில்கள், சேவையில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்தார். (ஓ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








காலிமுகத்திடலில் கோத்தகோகம பிரதேசத்துக்கு இணையவசதியை மேம்படுத்தும் வகையில், தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தால், 4 ஜி இணைப்புக் கோபுரம் தற்காலிகமாக அங்கு நேற்றுமுதல் நிறுவப்பட்டுள்ளது.
போராட்டத்தின் முதல் நாளில், இணைய மற்றும் தொலைத் தொடர்புகளை முடக்குவதற்காக ஜனாதிபதி செயலகத்தில் 'ஜாமர்' வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# நாணய நிதியத்துடனான சந்திப்பால் அரசுக்கெதிரான பிரேரணை ஒத்திவைப்பு

**கொழும்பு, ஏப்.16**

**சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள சந்திப்பால், அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக முன்வைக்கப்படவுள்ள அவநம்பிக்கைப் பிரேரணை மற்றும் குற்றப்பிரேரணை ஆகியவற்றை சபாநாயகரிடம் கையளிப்பது பிற்போடப்பட்டுள்ளது.**

தற்போதைய பொருளாதார இன்னல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில், சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் அது நேரடித் தாக்கம் செலுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் முன்வைத்த விடயங்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணைகளில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் கையொப்பமிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவற்றில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கையொப்பமிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதன் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் கையொப்பமிட்டுள்ளனர்.

அதேவேளை பிரேரணைகள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சந்திப்பொன்றைநடத்தவுள்ளது.

இதன்போது, குறித்த பிரேரணைகளை சபாநாயகருக்குக் கையளிக்கும் காலம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)




# அரசாங்கத்துக்கு எதிராக மூத்த நடிகரும் களத்தில்

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில், தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு உழைத்த மூத்த நடிகர் ரவீந்திர ரன்தெனியவும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

"மக்கள் போராட்டத்தில் நானும் பங்கேற்பேன். நாட்டின் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது.

நாடு நாளுக்கு நாள் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது" என்று அவர் தனது மனைவி ப்ரீத்தி ரந்தெனியவின் முகநூல் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, 'அயுபோவெவ மகாராஜனேனி' பாடலை எழுதியமைக்காக பாடலாசிரியர் சுனில் ஆர். கமகே மன்னிப்புக் கோரியுள்ளார். பாடலைப் பாடிய திருமதி சஹேலி கமகேவும் தனது முகநூல் கணக்கின் ஊடாக பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். (க-இ)

# தம்மிக்க பிரசாத் உணவு தவிர்ப்பு

கொழும்பு, ஏப்.16

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் இணைந்துள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பந்துவீச்சாளர் தம்மிக்க பிரசாத் ஒரு நாள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரியும், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கோரியும் காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டத்தில் தம்மிக பிரசாத்தும் இணைந்துள்ளார். அங்கு 24 மணித்தியாலம் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்.

அதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வழங்க வேண்டும் எனக் கோரி, கடந்த வாரம் கட்டுவாப்பிட்டிய தேவாலயத்திலிருந்து கொச்சிக்கடை வரை இடம்பெற்ற பேரணியை தம்மிக பிரசாத் ஏற்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

**'கண்ணால் காண்பதுவும் பொய், காதால் கேட்பதுவும் பொய், தீரவிசாரித்து அறிவதே மெய்' எண்டு எங்கட பழைய ஆக்கள் அடிக்கடி சொல்லுவினம். நேற்று அது சரிதான் எண்டு கனபேருக்கு விளங்கி இருக்கும்.**

**நேற்று உந்த பேஸ்புக்கில ஒரு படம் தாறுமாறா பரவத் தொடங்கிச்சு. அக்கராயன் ஆஸ்பத்திரியில வருத்தக்காரர் வரிசையில நிக்க, ஒரு டொக்டர் மேசைக்கு மேல கால்போட்டபடி அவைக்கு ட்ரீட்மெண்ட் செய்யிறார் எண்டது அந்தப் படத்தைப்பார்த்த எல்லாருக்கும் உடனயே விளங்கும். அவ்வளவுதான். எல்லாரும் 'சீ, உந்தாளும் ஒரு டொக்டரோ? இப்பிடி திமிர் பிடிச்சவை எப்பிடி ஒழுங்கா வருத்தத்துக்கு மருந்து குடுப்பினம்? வன்னிச் சனம் எண்டதாலதானே இப்பிடி இளக்காரம்?' எண்டு வாயில வந்ததையெல்லாம் பேசத் தொடங்கிட்டினம். அந்தப் படத்தைப் பார்த்த எல்லாருக்கும் இப்பிடி 'அநியாயத்தைக் கண்டால் பொங்கிற' குணம் வாறது இயல்புதான். ஆனால் கொஞ்சமெண்டாலும் இப்பிடி ஒரு டொக்டர் பப்ளிக்கா காலைத்தூக்கி மேசையில வைச்சுக் கொண்டு, வருத்தக்காரரைச் சோதிச்சு, மருந்து குடுக்கிறார் எண்டால் அதில ஏதோ இருக்க வேணும் எண்டு யோசிக்கவெல்லோ வேணும்.**

**அதுக்காக அந்தப் படம் ஒண்டும் வெட்டி ஒட்டி கிராபிக்ஸ் செய்த படமுமில்லை. படம் உண்மைதான். ஆனால் அப்பிடி அந்த டொக்டர் மேசைக்கு மேல கால் போட்ட காரணம்தான் வேறை. அந்த டொக்டருக்கு நீரிழிவு நோய். சின்ன வயசிலையே கடுமையான சலரோகத்தால ஆளுக்கு காலில காயம் வந்து, ஏலாத நிலைமை. அதால அவர் காலை கீழ விட்டால், நீர் கோர்த்து, கால் வீங்கி, பெரும் பிரச்சினையாகிடும். அதால காலை மேலை தூக்கித்தான் வைச்சிருக்க வேணும். அதோட அவரை இப்பிடி வருத்தம் எண்டதால, அது சரிவரும் மட்டும் வீட்டில, சம்பளத்தோட நிக்கலாம் எண்டும் மேலிடம் சொல்லியிருக்கு. ஆரும் சம்பளத்தோட வீட்டை நிக்கிறதெண்டா விடுவினமோ? இதுதான் சான்ஸ் எண்டு காலம் முழுக்க எப்பிடி வீட்டை நிண்டபடியே சம்பளத்தை எடுக்கலாம் எண்டுதானே யோசிப்பினம். ஆனால் இந்த டொக்டர், ' நானும் லீவில நிண்டால் இந்த அக்கராயன் சனம் சரியாக் கஷ்டப்படுமே' எண்டு நினைச்சு, தன்ர கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு, லீவில நிக்காமல், ஆஸ்பத்திரிக்கு ட்யூட்டிக்கு வந்திருக்கிறார்.**

**அப்பிடி இந்த வருத்தத்துக்குள்ளயும் சனத்துக்கு சேவை செய்ய வந்த டொக்டரை பாராட்டுறதை விட்டு, ஆரோ ஒரு பிரகிருதி அவர் மேசைக்கு மேலை கால் போட்டு இருக்கிறதை போட்டோ எடுத்து, பேஸ்புக்கில போட்டு, நாலு லைக் பிச்சை வாங்க நினைச்சிருக்கு. இப்பிடி நல்லது செய்யிறவையையும் கேவலப்படுத்தினால் இனிமேல் ஆரும் அப்பிடி நல்லது செய்ய வருவினமோ? இனியாவது இந்த லைக் பிச்சை வாங்கிறதுக்காக எச்சைத்தனமான வேலையளில இறங்காமல், எதையும் பேஸ்புக்கில போடுறதெண்டால் கொஞ்சமாவது அதை தீர விசாரிச்சுப் போட்டு செய்யுங்கோ.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் வாங்கிப் பதவியா? சாந்தவின் வீடு முற்றுகை

கொழும்பு, ஏப்.16

**“அரசாங்கத்திடம் பணம் வாங்கியா பதவியைப் பெற்றுக் கொண்டீர்கள்?” என்று கோஷமிட்ட மக்கள், இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரவின் வீட்டை நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர்.**

சேதனப்பசளை உற்பத்தி, மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்தல் மற்றும் கமத்தொழில் இராஜாங்க அமைச்சராக அண்மையில் பதவியேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவின் வீடு மக்களால் நேற்று முன்தினம் முற்றுகையிடப்பட்டது.

குறித்த பகுதியில் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மக்கள் அவரது வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சாந்த பண்டார பதவியேற்ற போது, கட்சித் தலைமையகத்துக்கு முன்பாகவும் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். “மக்கள் போராட்டத்தைக் கேவலப்படுத்தாதே, ஊழல் ராஜபக்சக்களுக்கு ஒட்சிசன் கொடுக்காதே, மைத்திரிபாலவை வேட்டையாடும் நாய்களைக் கட்டிப்போடு” உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (க-இ)

# விசேட தேவையுடையவர்கள் வடக்கு, கிழக்கிலேயே அதிகம்

## விவரங்கள் இல்லாமையால், உதவிகள் கிடைப்பதில்லை

வவுனியா, ஏப்.16

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயலாமைக்குரிய மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில், இயலாமையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை இங்கு மிகவும் அதிகம். எனினும் கணக்கெடுப்பு இல்லாமையால், அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளது.

இவ்வாறு இயலாமை உள்ளவர்களுக்கான தேசிய சபையில் உறுப்பினராக உள்ள வெள்ளையன் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரால் விசேட தேவையுடையவர்களாக மாறியவர்கள் பலர் உள்ளனர். உதாரணமாக முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு, சக்கர நாற்காலியில் தங்கள் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருப்பவர்கள் அதிகளவில் இருக்கின்றனர். இலங்கையில் வடக்கு, கிழக்கில் இயலாமையுடைய பிள்ளைகள் அதிகம் இருக்கின்றனர்.

இவ்வாறு விசேட தேவையுடையவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர் என்ற எண்ணிக்கை விவரங்கள் பெறப்படவில்லை.

கிராம அலுவலர்கள், பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர்கள் என்ற மட்டத்திலேயே ஒரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதே தவிர, முழுமையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பான முழுமையான கணக்கெடுப்பை மேற்கொண்டால், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகம் இருக்கின்றார்கள் என்ற தகவல் சர்வதேச மட்டத்தில் தெரியவரும் என்று அரசாங்கம் பயப்படுகின்றது.

இதேபோன்று தான் ஓட்டிசம் உள்ள பிள்ளைகளின் கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

முதலில் ஓட்டிசம் என்றால் என்ன என்பதைப் புரிய வைத்து, ஒரு கணக்கெடுப்பை மேற்கொண்டாலே, ஏனைய விடயங்களை மேற்கொள்ளலாம் -என்றார். (க-110)

# சிகரெட் இல்லையென கூறிய வர்த்தகர் குத்திப்படுகொலை

கொழும்பு, ஏப்.16

சிகரெட் இல்லையெனக் கூறிய வர்த்தகர் கூரிய ஆயுதத்தால் குத்திப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாதம்பே முகுனுவடவன மஹகமப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

வர்த்தக நிலையத்துக்கு வருகை தந்த நால்வர், வர்த்தகரிடம் சிகரெட் கேட்டுள்ளனர். வர்த்தகர் சிகரெட் இல்லை என்று கூறியதால், வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றி வர்த்தகரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த வர்த்தகர், சிலாபம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வரும் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மாதம்பே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)




# காலிமுகத்திடலில் கோத்தா ஆதரவாளர்

அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்று வரும், போராட்டத்தில் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவுக்கு ஆதரவானவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரை அடையாளம் கண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பணியிலிருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். குறித்த நபர் கடந்த இரண்டு நாள்களாக காலி முகத்திடலில் சந்தேகம் ஏற்படும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வடை விற்பனை செய்துள்ளார். ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால், அரசாங்கத்துக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தில், அவர் கோத்தாபயவுக்கு ஆதரவான பதாகையை கையில் ஏந்தியிருந்தார். அவரது ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டிருந்தன. (க-இ)

# காலிமுகத்திடல் போராட்டத்துக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆதரவு

கொழும்பு, ஏப்.16

அரசாங்கத்துக்கு எதிராக, காலி முகத்திடலில் இடம்பெறும் போராட்டத்துக்கு ஆதரவாக, பல்கலைக்கழக மாணவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கராப்பிட்டிய போதனா மருத்துவமனைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் புத்தாண்டு உணவு மேசையொன்றைத் தயார்படுத்தி, அதற்கு போராட்டத்துக்கான உணவு மேசை என்று பெயரிட்டுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், கண்டி மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக புத்தாண்டு உணவு மேசை அமைத்திருந்தனர். பொதுமக்களுக்கும் உணவுகளைப் பகிர்ந்தளித்தனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அல்பிட்டியவிலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு வருகை தந்த பொதுமக்கள் போராட்ட உணவு மேசைக்கு பலகாரங்களை அன்பளிப்புச் செய்தனர்.

அதேவேளை, பல்கலைக்கழக மாணவர்கள் கிரிபத்கொடையில் ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தின் போது, மாணவர்கள் சிலரைத் தாக்கி அங்கிருந்த கூடாரத்தை உடைத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெரமுனவின் பிரதேச சபை உறுப்பினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (க-இ)

# மரக்குற்றிகள் கடத்தல், இருவருக்கு மறியல்



கிளிநொச்சி, ஏப். 16

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் பகுதியில் தேக்கு மரக்குற்றிகள் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிச்சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் சோதனையில் ஈடுபட்ட போது குறித்த பகுதியிலிருந்து வழியாணம் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனத்தில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட 18 தேக்கு மரக்குற்றிகளைக் கைப்பற்றியதோடு அதில் பயணித்த இருவரையும் கைது செய்தனர். சந்தேகநபர்களை கடந்த 13 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-14-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



'கோத்தா கோ கம'வில் அமைக்கப்பட்டுள்ள நூலகம்...

# குப்பைத்தொட்டிகளுக்கு குரக்கன் சால்வை



காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களால் கழிவுகளைச் சேகரிக்கும் குப்பைத் தொட்டிகளுக்கு, ராஜபக்சக்கள் அணிவதைப் போன்ற குரக்கன் சால்வை அணிவிக்கப்பட்டுள்ளது.




தென்னிந்திய திரைப்பட நகைச்சுவை நடிகர் வைகைப்புயல் வடிவேலுவின் பிரபல்யமான வசனம் எழுதிய பதாகை, ஜனாதிபதி செயலக முன்றிலில் வைக்கப்பட்டுள்ளது.

## பொறுப்புக்கூறலுக்கு வலியுறுத்தும் பதாகைகள்




## 'கோத்தா என்ன கம' அமெரிக்காவில் முளைத்த பதாகை...





ஜனாதிபதி கோத்தாவை வீடு செல்லுமாறு வலியுறுத்தி காலிமுகத்திடலில் 'கோத்தா கோ கம' அமைக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவுக்கு அவரை திரும்பி வருமாறு வலியுறுத்தும் வகையில் 'கோத்தா என்ன கம' பதாகை வைக்கப்பட்டுள்ளது.




20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்களுடன் குப்பைதொட்டிகள்.

## வெற்றுப் பிளாஸ்ரிக் கழிவுகள்....




போராட்டக்களத்தில் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் போத்தல்கள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

## இந்த வரிசைக்கு முடிவில்லை...



நாடுமுழுவதும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. கடந்த சில தினங்களாகப் பெற்றோலுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கொழும்பின் புறநகர் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் [illegible] நீண்ட வரிசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீரணி நாகபூஷணி அம்...
# சீரணி, சண்...
# ஆலய இரதோற்சவ ...




## மஹோற்சவ குருக்களின் ஆசியுரை
## சீரணித்தாயின் சிங்காரப்பவனியிலே



மூவுலகும் தொழுதேத்தும் முப்பெரும் தேவியாவள் சித்திரத் தேரினிலே சித்திராப் பௌர்ணமி யின் சிங்காரமாய் பவனிவர காணக்கண் ஆயிரம் வேண்டும். அருவமும் உருவமாகி அநாதீயாய் பலவாய் ஒன்றாய் கருணை பூத்த முகத்திள்ாய் சீரணியிப் பதியில் மேவி சித்திரை மஹோற்சவத்தின் பதினேழாம் திருநாளில் அன்புடன் பூஜைகள் அபிஷேகங்கள் அழகாய் அலங்காரம் செய்து முருகனும் முன்னவனும் முதலில் ஆடிவர பூவுலக மாந்தரெல்லாம் அன்புடன் சேவித்தெழுவாதுலகும் சூரியனும் அழகாகக் பூச்சொரிய தேரோடும் நன் நாள் சிறப்பாக அமைந்துவிட நல்லாசிகள் பல பகிர்கின்றேன் வாழ்க.

**சிவஸ்ரீ கு.சோமஸ்கந்த குருக்கள்**
**தேவஸ்தான குரு, மஹோற்சவ குருக்கள் சீரணி.**

## இரதோற்சவ சிறப்பிதழ் வாழ்த்துக்கள்



தேர் ஓடும் இன் நன் நாளில் ஞானத் தெய்வம் கௌரிபாலா சுவாமிகளின் ஆசியுடன் ரதோற்சவ சிறப்பிதழ் மலர வாழ்துத்கின்றோம். முக்காலமும் உணர்ந்த மெஞ்ஞானியால் எதிர்கால சிந்தனை யுடன் வரையறை செய்யப்பட்ட உறுதி உரைகளை நாம் உதாசீனம் செய்ததால் கடந்த 12 வருடங் கள் ஆலயத்தின் செயற்பாடுகள் சிதை வடைந்தன கண்ணுற்றோம்.யாவரும் நலம்பெற வேண் டும் என்கின்ற அடிகளாரின் ஞானசக்தி இன்று உயிர்ரோட்டமாக எழுந்து ஓங்கும் பிரகாசிக்கின் றதை பார்த்து ஆனந்த மழையில் நனைந்து மகிழ்வுறும் யாவரும் தெய்வ திருமகள் எமக்கு தந்த அரிய பொக்கிசத்தை என்றும் பாதுகாப்போம் என இன் நன்னாளில் உறுதி பூணுவோம் ஆக.

**நல்லதையே சிந்திப்போம், நல்லனவே செய்வோம்**
**ஆலய தருமகர்த்தா சபை**
**உறுப்பினர்கள்.**

## தங்கரத தேரேறி....



சித்தர்கள் கூடி வாழும் சீரணியம் பதியினிலே
பக்தர்கள் புடைசூழ பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரத சித்திரத் தேரேறி சொர்ப்பனமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாக பூசணியே....

**இ.சிறிதரன் (தலைவர்)**

## இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:


**Yaso Textile**
Neliyady.

**Iyynkaran Motors**
Authorized Dealers for Hero and Honda Spare Parts.
Authorized Distributors of CEAT TYERS in Jaffna.
Market View, Jaffna Road, Manipay.
iynkaranmotors@gmail.com
Tel : 021 225 5150

**பத்மராஜன் அன் சன்**
நகைத் தொழிலகம்
**Pathmaraja & Son Jewellers**
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே. 077 6002584

With Best Compiliment From:
**சக்தி எலக்ரிக்கல்ஸ்**
மின்சார, இலத்திரனியல் பொருட்களின் விற்பனை முதல்வன்
சந்தைச் சதுக்கம், சங்கானை,
தொ.பே 077 327 6397

**மொடேன் மற்ஸ் அக்கடமி**
-சண்டிலிப்பாய்-
புதிய கல்வியாண்டு - 2022
தரம் - 03 – O/L , A/L வரை
(தமிழ் மொழி மூலம், ஆங்கில மொழிமூலம்) எல்லாப் பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
T.P:077 817 5822
நிர்வாகி : B.Kuga
(கணித ஆசிரியர்)

**THURKA**
Furniture & Timber Sales Centre
Dealers in Timbers of All kind of Furnitnre
Chavakacheri Road, Allayampathy
Seerani Junction
Sandilipay.
0777 114852

**PAKIYARATNAM**
Hard ware stores
Distributors for :
Elephant brand soft drinks
No – 163, 165 Main street, Chankanai.
T.P – 021 225 1244
E-Mail:- pakiyaratnam.ccs@gmail.com
Hotline 077 5577335

**KIRUBA MOTORS**
**கிருபா மோட்டோஸ்**
பிரான் பற்று வீதி, சங்கானை.

**நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்**
**New Shanmugaanatha Textiles**
58, 23, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 222 3356

**கந்தசாமி அன் சன்ஸ்**
**KANTHASAMI & SONS**
பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
பிரதான வீதி, சங்கானை.
Main Street, Chankanai.

**பாபா வெதுப்பகம்**

பிரதான வீதி, சங்கானை.

**Restaurant & Café**
Delicious Authentic Foods In Jaffna City
Dine in & Takeaway
62/61, Stanley Road, Jaffna.
021 222 4040,
077 758 5909.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது இல்லையேல் இனி எப்போதுமில்லை!

ராஜபக்சக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சியை அவ்வளவு இலகுவாகக் கைப்பற்றியிருக்கவில்லை. அவர்கள் ஒவ்வொரு தடவையும் ஆட்சியைப் பிடிப்பதற்கு சிங்கள பௌத்தம் என்ற இனவாத வெறியையும், போர்வெற்றி என்ற போதையையும் பயன்படுத்தினர். அந்த வெறியும், போதையும் ஒருநாள் அவர்களுக்கு எதிராகவே திரும்பும் என்பதும் அவர்களுக்குத் தெரியாததல்ல.

2005ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையையும், புலிகள் ஒழிப்புக் கோஷத்தையும் முன்வைத்தார்கள். ஆட்சியைப் பிடித்தார்கள். 2010ஆம் ஆண்டு போர் வெற்றியையும், சிங்களபௌத்த இனவாதத்தையும் விதைத்தார்கள். மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நெருங்கும் அளவுக்கு வென்றார்கள். 2015ஆம் ஆண்டு ராஜபக்சக்கள் மீதான ஊழல் வெறுப்பில் ஒரு பகுதி சிங்களவர்கள் அவர்களுக்கு எதிரானவர்களானார்கள். சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த வாக்குகளும் அவர்களுக்கு எதிராகத் திரும்ப, ராஜபக்சக்கள் ஆட்சியுரிமையை இழந்தார்கள். இதனால் தமிழ் மக்கள் தங்களைத் தோற்கடித்து விட்டார்கள் என்ற வெறி, சிங்கள மக்கள் மத்தியில் அவர்களை கதாநாயகர்களாக்கியது. ஈஸ்டர் தாக்குதலும் அவர்களுக்குக் கைகொடுக்க 2019ஆம் ஆண்டு வென்றார்கள். அதன் பின்னர் கொரோனாவை வெற்றிகரமாக கையாண்டதாகச் சொல்லி நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தை அமைத்தார்கள்.

ஆட்சியைப் பிடிப்பது எவ்வளவு கடினமோ அதைவிடக் கடினம் அதைத் தக்க வைப்பது. ராஜபக்சக்களுக்கும் இது பெரும்பாடுதான். அவர்கள் ஒவ்வொரு தடவையும் ஏதோவொரு விடயத்தை வெற்றிகரமாக ஒப்பேற்றிக் காட்டி அதனூடாக தாங்கள்தான் சிங்கள மக்களின் மீட்பர்கள் என்ற விம்பத்தை உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். இப்போது பொருளாதார நெருக்கடியிலும் அவர்கள் அத்தகைய ஒரு நடவடிக்கையைத்தான் முன்னெடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆனால் அவர்களால் அந்த முயற்சியில் பாதிக் கிணற்றைக் கூடக் கடக்க முடியவில்லை என்பதுதான் பரிதாபம்.

இப்போது எழுந்துள்ள போராட்டங்களால் அதற்கு அஞ்சி ராஜபக்சக்கள் பதவியைத் துறந்து செல்வார்களாக இருந்தால் இலங்கையின் வரலாற்றில் இனி எப்போதுமே ராஜபக்ச பரம்பரையினர் ஆட்சிக்கு வர முடியாது. ஆட்சிக் கதிரையைக்கூட நெருங்க முடியாது. அவ்வளவு தூரம் சிங்கள மக்களிடத்தே அருவருக்கத்தக்கவர்களாக மாறியிருக்கின்றனர் ராஜபக்சக்கள்.

இந்தப் பொருளாதார நெருக்கடியை எப்படியாவது சரி செய்வோம் என்று ராஜபக்சக்கள் நினைக்கின்றனர். மந்திரத்தால் மாங்காய் பிடுங்குவதைப்போல, அதலபாதாளத்திலிருக்கும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தூக்கி நிறுத்துவோம் என்று கருதுகின்றனர். அழிக்க முடியாது என்று கருதிய விடுதலைப் புலிகளை ஒழித்ததைப்போன்று, கட்டுப்படுத்த முடியாது என்று கூறிய கொரோனாப் பரம்பலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததைப் போன்று, மீட்க முடியாத பொருளாதாரத்தை மீட்டுக் காட்டினோம் என்ற எண்ணத்தை சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கவேண்டும் என்று நினைக்கின்றனர் ராஜபக்சக்கள்.

அதற்காக இப்போது எழுந்துள்ள நெருக்கடிகளையும், தங்களுக்கு எதிரான அவமானங்களையும் பொறுத்துக் கொண்டும் சகித்துக் கொண்டும் காலத்தை ஓட்டி, பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து விட முயற்சிக்கின்றனர். அதற்காகவே உலகநாடுகள் எல்லாவற்றினதும் கால்களில் விழுந்தாவது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழியைத் தேடுகின்றனர்.

ராஜபக்சக்கள் என்ற பரம்பரையை இலங்கையின் முடிசூடா மன்னர்களாக பிரகடனப்படுத்திய அவர்கள் அதைத் தொடர்ந்தும் பாதுகாக்க முயற்சிக்கின்றனர். இப்போது நடக்கும் போராட்டங்களாலெல்லாம் அவ்வளவு இலகுவாக ராஜபக்சக்களை அகற்றமுடியாதுதான். எனினும் அடிமேல் அடி அடித்தால் அம்மியே நகரும் போது ராஜபக்சக்கள் எம்மாத்திரம்? தொடர்ச்சியான போராட்டங்கள் அதன் வீரியத்தோடு நாடெங்கும் பரவினால் ராஜபக்சக்கள் விரும்பியோ, விரும்பாமலோ வீட்டுக்குச் சென்றுதான் ஆகவேண்டும். ஆனாலும் இப்போது அவர்களை அகற்றாவிட்டால், இனி எப்போதுமே அகற்றமுடியாது என்பதும் கசப்பான உண்மையே!

## நாளொரு நல்வார்த்தை

"தரையில் ஒன்பது முயல்கள் இருந்தால், அதில் நீங்கள் ஒன்றைப் பிடிக்க விரும்பினால், ஒன்றில் மட்டும் கவனம் செலுத்துங்கள்." - ஜாக் மா



# கோத்தாபயவின் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை!

## ஒப்புக்கொள்கிறார் நாமல்



**கொழும்பு, ஏப்.16**

**கோத்தாபய ராஜபக்ச நிர்வாகம் தேவையான அளவுக்கு வெளிப்படைத்தன்மையுடன் இருக்கவில்லை என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச ஒப்புக்கொண்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியும், அரசாங்கமும் நாட்டுக்கான அவர்களின் திட்டங்கள் குறித்து இன்னும் வெளிப்படையாகக் குரல் கொடுத்திருக்கவேண்டும். ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றி தனது திட்டங்களைப் பற்றி அவர்களிடம் கூறவேண்டும். பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் நிதியமைச்சரும் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அதைச் சமாளிப்பதற்கான, அவரது திட்டங்கள் குறித்து அதிகம் பேசியிருக்க வேண்டும். மக்கள் ஏன் அரசாங்கத்தின் மீது கோபமாக உள்ளனர் என்பது எமக்கு புரிகின்றது. எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான அவர்களின் உரிமையை ஆதரிக்கின்றேன். எனினும் மக்களின் கோபம் பயனற்றது.
மேலும் நெருக்கடியை உருவாக்கக்கூடும். குறிப்பாக எதிர்ப்புகள் சுற்றுலாப் பயணிகளை விலக்கி வைக்கக்கூடும். இது இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்- என்றார். (க-இ)

# வடக்கு ஆசிரியர்களுக்கு தென்பகுதியில் நியமனம்

## பாகுபாடென குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.16
வடக்கு மாகாணத்தில் வன்னிப் பிரதேச பாடசாலைகளில், பெருமளவான ஆசிரியர் பற்றாக்குறை உள்ளபோதும், கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சிகளை முடித்த வடக்கு மாகாண ஆசிரியர்களுக்கு, வடக்கில் நியமனம் வழங்கப்படுவதில்லை.
மாறாக அவர்கள் அறியாத தென்பகுதி ஊர்களுக்கு நியமனம் வழங்கப்படுகின்றது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
இதுதொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தற்போதுள்ள நாட்டுச் சூழ்நிலையில் அவர்கள் வாழ்க்கைக்காகப் போராடும் நிலையில் இவ்வாறான நியமனத்தை ஏற்க முடியாது. வெளிமாவட்ட ஆசிரியர்களில் தமது சேவைக் காலத்தை நிறைவுசெய்தவர்கள் பலருக்கு இடமாற்றமும் வழங்கப்பட்டுவிட்டது.
இந்தநிலையில் இன்னும் வன்னிப்பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்த நிலையில், வடக்கு மாகாணத்தைச் சொந்த வாழ்விடமாக உள்ள ஆசிரியர்களை அவர்கள் அறியாத இடங்களுக்கு நியமிப்பது ஏன்? இதனை ஓர் இனவாத அல்லது பழிதீர்க்கும் கருமமாகவே பார்க்கின்றோம்.
எனவே அவர்களை அவர்களது சொந்த மாகாணத்தில் கடமையாற்ற அனுமதியுங்கள். இங்குள்ள வெற்றிடத்தை நிரப்புங்கள். வடக்கு மாகாணத்தைச் சார்ந்த அரசியல் தலைவர்களும் இந்த விடயத்தில் கரிசனை கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (க-இ)

நாளை 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை சித்திரை 04
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம்: 04.34 - 06.04
உயிர்த்த ஞாயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேங்காய் துருவுவதற்கு வேலை ஆட்கள் தேவை

இருபாலையில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்கு இயந்திரத்தில் தேங்காய் துருவுவதற்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) அனுபவ முள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.** (CS 18959) (4/6)

தொடர்புகளுக்கு:- **077 986 2649**

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

**வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத்தெரிவும் எதிர்வரும் (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூட்டத்தில் இடம் பெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர்சங்க அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (CR) (4/6)

செயலாளர்
பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

# ரணில் தலைமையேற்றால் நாட்டின் நிலைமை மாறும்

## ஐ.தே.க. தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்.16**

**முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்க சந்தர்ப்பம் வழங்கினால், அவரால் தற்போதைய நிலைமைகளை மாற்ற முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிக்கையில், அரசமைப்பைத் திருத்தவோ அல்லது புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தவோ தேவையில்லை. மக்கள் சார்பாக செயற்படக்கூடிய தனிநபரே தேவை. 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாடு இருந்த நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். ஐந்து தடவைகள் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவால் தற்போதைய நிலைமையை மாற்ற முடியும். அவர் ஒரு மாதத்துக்குள் வரிசை முறையை இல்லாதொழிப்பார் -என்றார். (க-இ)

# வெளிநாட்டுக்கடன் செலுத்தல் நிறுத்தம் இலங்கைக்கு மற்றொரு இருண்ட நாள்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.16

வெளிநாட்டுக் கடனைச் செலுத்தும் திறன் இலங்கைக்கு இல்லை என்பதால், அது இடைநிறுத்தப்படும் என்று நிதியமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இது இலங்கை வரலாற்றில் மற்றுமொரு இருண்ட நாளை உருவாக்கியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முடிவால் நாட்டு மக்களும், வர்த்தகர்களும் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்.

டொலரை மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் என்ற முடிவு நல்லது. இதை முதலிலேயே நாம் எடுத்துக் கூறினோம். அரசாங்கம் எடுக்கும் தீர்மானம் தவறு அவ்வாறு பயணிக்க முடியாது என்றோம். எனவே சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று விவாதிக்குமாறு கேட்டுக் கொண்டோம். நாம் கூறியதை அன்றே கேட்டிருந்தால், இவ்வளவு பேரழிவு ஏற்பட்டிருக்காது. சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லும்போது சர்வதேச அளவில் நமக்குக் கிடைக்கும் நம்பிக்கையைப் பற்றி சிந்திக்கின்றோம். அத்தகைய நம்பிக்கையை நாம் கட்டியெழுப்பியிருந்தால், நிதிச் சந்தைகளில் இருந்து கடன் வாங்க முடிந்திருக்கும். அந்த நடவடிக்கைகளை முதலில் எடுத்திருந்தால் இவ்வாறு கடன்கள் நிறுத்தப்பட்டிருக்காது. கடனை அடைக்க பணத்தைச் செலுத்தியதால் இறுதியாக மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமையே ஏற்பட்டது. முடிவில் என்ன நடந்தது? கடனை நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. சுமார் 5.5 பில்லியன் டொலர் அந்நிய கையிருப்பு அழிக்கப்பட்டுள்ளது. இலங்கையை இந்தப் பேரழிவுக்கு இழுத்துச் சென்றவர்கள் உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும் -என்றார். (க-இ)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 05 1976

மறைவு 03 05 2015



### அமரர் தியாகராசா சசிக்குமார்

**(திதி:16.04.2022)**

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கே
நிஜம் ஒன்று நிழலாய் மாறி
கண்முன்னே வாழ்ந்து கனவாகி
ஆண்டுகள் ஏழு ஆனபோதும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!

**உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்**

அப்பா (தியாகராசா) அம்மா (புஸ்பராணி)
தம்பிமார்கள் (மதனமோகன், பிரதீபன்,ஜெயரூபன்)
தங்கைகள் (சுஜாத்தா, சியாமளா)
மச்சாள்கள் (சுதர்ஷினி, துளசி)
மச்சான்கள் (கரன், யசிகரன்)
பெரியப்பா (டிசாந், யனுசியன், சசித்)
மருமகன் (அக்ஷயன், அவந்தியன்)
மருமகள் (தூபிகா)

**46, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.** (cs.19329) (2.7)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் பரமேஸ்வரி



தோற்றம் 25.10.1935 மறைவு 15.04.2022

விடத்தற்பளை மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (15.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசித்தம்பி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், திருஞானசோதி (கொடிகாமம்), திருமதி (பரிசாரகர் - ஆதாரவைத்தியசாலை சாவகச்சேரி) ஆகியோரின் அன்புமிகு தாயாரும், மங்களேஸ்வரி, சிவராசா ஆகியோரின் மாமியாரும், குபேந்திரன், துஷியந்தன், ஜெயகரன், மேனகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அல்லாரை தெற்கு, மீசாலையில் உள்ள அன்னாரது மகளின் வீட்டில் இடம்பெற்று கச்சாய் எறியாள்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 112 1678** **தகவல்:- குடும்பத்தினர்.**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தடுக்கத் தவறியோர் எங்கே?

## கத்தோலிக்க திருச்சபை கேள்வி


கொழும்பு, ஏப்.16

நாட்டில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில், குண்டுத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறினர் என்று குற்றம் சாட்டப்பட்ட சிலர் எவ்வாறு விடுவிக்கப்பட்டனர் என்று கத்தோலிக்க திருச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பேராயரின் பேச்சாளர் அருட்தந்தை. சிறில் காமினி தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதல் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவால் வெளியிடப்பட்ட கருத்தானது மற்றுமொரு நாடகம். இது சிறுப்பிள்ளைத்தனமான விடயம். நாட்டின் பாதுகாப்புச் செயலாளரான கமல் குணரட்ண பொதுமக்களின் வரி மூலம் சம்பளம் பெறும் அரச சேவையாளர். பொது மக்களைப் பாதுகாப்பதே அவரின் வேலையே தவிர, அவர் அரசியல் தலைவர் அல்ல. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்று 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆயினும் இதுவரை குற்றவாளி யார் என்பதையும், அதற்கு பின்புலமாக யார் இருந்தார்கள் என்பதையும் கண்டுபிடிப்பதற்கு பாதுகாப்புத் துறை தவறியுள்ளது.

உண்மையில், தற்போது பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக வரிசைகளிலும், போராட்டங்களிலும் ஈடுபட்டு வருவதால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஊடக சந்திப்புக்களை நடத்தாமல் இருந்து வந்தோம். எனினும், நாட்டின் பாதுகாப்புச் செயலாளரான கமல் குணரத்ன தலைமையில் ஊடக சந்திப்பு நடத்தப்பட்டிருந்தது.



இதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அவரிடம் நாம் 20 கேள்விகளை முன்வைக்கின்றோம். அவை தொடர்பில் தெளிவான பதிலை எமக்குத் தரவேண்டும் -என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்

2022

கன்னி



மங்கலகரமான **'சுபகிருது'** புத்தாண்டு வியாழக் கிழமை பிறந்துள்ளது. குரு வாரத்தில், குரு பகவான் தன் சொந்த வீடான மீன ராசியில் இருக்கும் நேரத்தில் பிறந்த இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது.

'சுபகிருது' என்றாலே நற்செய்கை என்று பொருள். 'சுபகிருது' வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபீட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

கன்னி ராசிக்கு சுபகிருது தமிழ்ப் புத்தாண்டு எப்படியான பலன்களைத் தரும் எனப் பார்ப்போம்.

கன்னி ராசிக்கு இந்த சுபகிருது தமிழ்ப் புத்தாண்டில் சற்று கவனமாக இருக்க வேண்டியது அவசியம். ஆரோக்கியம் சார்ந்த விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தவும். மிதவேகமும், எச்சரிக்கையுடனும் செயற்படவும். நீங்கள் உண்டு, உங்கள் வேலை உண்டு என்று வேலையைச் செய்யவும். பிறர் விடயங்களில் தலையிட வேண்டாம். குறிப்பாக பிற மதத்தினர் குறித்த கருத்துத் தெரிவிப்பது, பிறமொழி பேசுபவர்கள், பெண்கள், விதவை போன்றோருடன் சற்றுக் கவனமாக இருக்க வேண்டிய ஆண்டு.

சிலருக்கு திடீர் அதிர்ஷ்டங்கள், பண வரவுகள் வரக்கூடும். நினைத்துப் பார்க்க முடியாத வகையில் சிலர் உங்கள் பெயரில் உயில் எழுதி வைத்திருக்க வாய்ப்புள்ளது. சொத்து சேருதல் போன்ற விடயங்கள் சாதகமானதாக அமையலாம்.

ஆன்மிகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல காலமாக இருக்கும். சிலருக்கு குரு, மகான்களின் தரிசனம் கிடைக்கும். வெளிநாடு, வெளியூர்ப் பயணம் செல்ல வாய்ப்புண்டு. குடும்பத்தில் சஞ்சலங்கள் இருந்தாலும் மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது. கணவன் - மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும். குருவின் சஞ்சாரம் இந்தாண்டு முழுவதும் உங்களுக்கு மிகவும் சாதகமானதாக இருப்பதால் யோகமான அமைப்பு உங்களுக்கு இருக்கும்.

கன்னி ராசியினர் நடந்த ராகு கேது பெயர்ச்சியில் பரிகாரம் செய்துகொள்ள வேண்டிய ராசிகள் பட்டியலில் உள்ளனர். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பெண்களுக்கு சிறுநீரகம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தாண்டில் உங்களுக்குத் திடீர் பணவரவு வரும். அதேசமயம் பணத்தேவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. கூடுதல் விரயம் ஏற்படவும் அதிகவாய்ப்புள்ளது.

கன்னி ராசியை சேர்ந்தவர்களுக்குக் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும். எந்தவொரு சூழ்நிலையிலும் வீண் பேச்சைத் தவிர்க்கவும். கோபத்தைக் கட்டுப்படுத்திச் செய்யக்கூடிய எந்தவொருசெயலும், பேச்சு வார்த்தையும் சுபத்தில் முடியும்.

குலதெய்வ வழிபாடு, சிவபெருமான் வழிபாடு நல்லது.


# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 07 - 1948

மறைவு
13 - 04 - 2022



## ஆறுமுகம் சபாரட்ணம் தியாகராஜா

**(இளைப்பாறிய பிராந்திய கணக்காளர் இ.போ.ச. கோண்டாவில், சமாதான நீதவான்)**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சபாரட்ணம் தியாகராஜா அவர்கள் கடந்த (13.04.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், நாவாந்துறை றோ.க.வி) அன்புக் கணவரும், ராகுலன் (கனடா), நளாயினி (யாழ்ப்பாணம்), சுகந்தன் (அவுஸ்திரேலியா), பிரசாந்தன் (அவுஸ்திரேலியா) அவர்களின் பாசமிகு தந்தையும், ஜெயவதனா, Dr.ஸ்ரீ.கோபிஷங்கர், கலாநிதி ஷாலினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பவந்தி, அரவின், லவங்கி, வர்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமதி சிவசுப்பிரமணியம் மகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), காலஞ்சென்ற தர்மராசா மற்றும் சண்முகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாரதிதாசன், காலஞ்சென்ற சண்முகதாசன் மற்றும் கோகிலராணி, மோகனதாசன், கண்ணதாசன், முருகதாசன், ஜங்கரதாசன், யமுனாராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

271/1, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(CS 19327) (4/5)

தகவல்: குடும்பத்தினர்


# குருப்பெயர்ச்சி பலன்கள்

## கன்னி

**சுப கிரகமான அதிசார குருபெயர்ச்சி கும்பத்திலிருந்து மீனராசிக்கு நிகழ்ந்துள்ளது. இந்தப் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள் 12 ராசிகளுக்குப் பார்ப்போம்.**

மனிதநேயம் மிகுந்த பண்பாளர் நீங்கள். உங்களின் சுகஸ்தானாதிபதியான குருபகவான், இதுவரையிலும் 6ம் இடத்தில் மறைந்திருந்தார். உங்களில் சிலர், உள்ளத்தளவில் கஷ்டங்களை அனுபவித்து வந்திருப்பீர்கள். இனி அந்த நிலை மாறும். 14.4.2022 முதல் 22. 4.2023 வரை உங்கள் ராசிக்கு 7ல் அமர்ந்து, உங்களை நேருக்குநேர் பார்க்கவிருக்கிறார் குருபகவான்.

ஆகவே, பிரச்சினைகள் நீங்கும்; உங்கள் முகம் மலரும். திறமைக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். பல புதிய வாய்ப்புகள் வந்து முன்னேற்றப் பாதையை அமைத்துத்தரும். பல காலமாகத் தடைப்பட்டிருந்த விஷயங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள். தேக நலனைப் பொறுத்த வரையிலும் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும்.

உங்களின் பேச்சு எல்லோரையும் கவர்ந்திழுக்கும். பிரபலங்களும் உங்களுக்கு நண்பர்களாவார்கள். கடன்கொடுத்து ஏமாந்த தொகை, இப்போது திரும்பிவரும்; மேலும் பல வகைகளிலும் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வீட்டில் வாழ்க்கைத்துணைவருடன் இணைந்து பல காரியங்களைச் சாதிப்பீர்கள்.

வீட்டின் பொருளாதார நிலை உயரும். வாரிசு இல்லாமல் தவித்த தம்பதிக்குக் குழந்தைப்பேறு கிடைக்கும். ஏதேதோ காரணங்களால் கல்யாணம் தடைப்பட்டிருந்த அன்பர்களுக்கு, விரைவில் கல்யாணம் கூடிவரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். கௌரவப் பதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

**14.4.2022 முதல் 29.4.2022 வரை**

உங்களின் சுக, சப்தமாதிபதியான குருபகவான் பூரட்டாதி 4ம் பாதத்தில் செல்வதால், புதிய முயற்சிகள் பலிதமாகும். அரசாங்கத்தாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர் களாலும் ஆதாயம் அடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு.

**30.4.2022 முதல் 24.2.2023 வரை**

சனி பகவானின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால், தள்ளிப்போன திருமணம் உடனே முடியும். பணப்புழக்கம் அதிகரித்தாலும் செலவுகளும் துரத்தும். கடனில் ஒரு பகுதியை பெறுவீர்கள்.

8.8.2022 முதல் 16.11.2022 வரை உத்திரட்டாதி நட்சத்திரத்திலேயே குரு வக்ரத்தில் செல்வதால் புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பூர்வீகச் சொத்தை சீர்செய்வீர் கள்.

**24.2.2023 முதல் 22.4.2023 வரை** குருபகவான் புதனின் ரேவதி நட்சத்திரத்தில் செல்கிறார். ஆகவே, சிலருக்குப் புதிய வேலை கிடைக்கும். உடம்பு வலி, சோர்வு நீங்கும். புதிதாக வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**மொத்தத்தில் இந்தக் குருப்பெயர்ச்சி, உங்களின் நீண்ட கால ஆசைகளை நிறைவேற்றுவதாகவும் அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நல்லவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். சுபச்செலவு செய்வீர்கள். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்டநாளாக நீங்கள் எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும்.

**இடபம்:** பழைய முதலீடு ஒன்று எதிர்பாராத லாபத்தை தரும். குழந்தைகளுக்கு பொறுப்பு வரும். மனநிம்மதி கூடும் நாள். நீண்ட நாளாக விரும்பிய செயலை செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** பணியிடத்தில் இருந்த பிரச்சினை தீரும். உற்சாகம் கூடும். பழைய நண்பர்களின் வருகையால் உங்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும். குதூகலமும், ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** கலைத்துறையினர் முயற்சியால் லாபம் காண்பர். வீட்டில் ஒருவருக்கு வேலை தொடர்பான நல்ல செய்தி வரும். திட்டமிட்ட செயல் சற்று காலதாமதமாக வெற்றி பெறும்.

**சிம்மம்:** உங்களது முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும். குழந்தைகளின் செயல்களால் பெருமிதம் அடைவீர்கள். எதிர்பாராத நன்மை உண்டு. சொத்து விஷயத்தில் கவனம் தேவை.

**கன்னி:** உங்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தினரால் பெருமிதம் ஏற்படும். [illegible] செய்து முடிப்பீர்கள். பயம் நீங்கும். ஆசிரியரிடம் பாராட்டுப் பெறுவீர்கள்.

**துலாம்:** வியாபாரம் தொடர்பான நல்ல செய்தி வந்து சேரும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் நிகழ்வு நடைபெறும் நாள். தேவையற்ற கவலைகளால் வருத்தப்பட வேண்டாம்.

**விருச்சிகம்:** வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். புதிய தொழில்களில் முதலீடு செய்வது குறித்து யோசிப்பீர்கள். முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும்.

**தனுசு:** புதிய மனிதர்களிடம் அதிக நெருக்கம் காட்டவேண்டாம். ரகசியங்களைப் பகிர்ந்து கொள்வதால் தொல்லை ஏற்படக்கூடும். உழைப்புக்கேற்ற நல்ல பலன்களைப் பெறுவீர்கள்.

**மகரம்:** தாமதமான வெற்றி கிடைத்தாலும் மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் சில நாள்களாக இருந்து வந்த வருத்தம் நீங்கும். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**கும்பம்:** பிரிந்து சென்ற நண்பருடன் நெருக்கம் உண்டாகும். மற்றவருடன் பழகுவதில் கவனம் தேவை. சகோதரர் மகிழ்வார். அக்கம்பக்கத்தினரை அனுசரித்து செல்வீர்கள்.

**மீனம்:** யாரிடமும் பகை வேண்டாம். ஆன்மிகத்தில் ஈடுபாடு கூடும். குழந்தைகள் வெற்றி பெறுவர். புண்ணியச் செயலைச் செய்வீர்கள். பயணத்தின் மூலம் நன்மை காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோல் பேஸ்' போராட்டமும் இடைக்காலத் தீர்வும்!



ஆர்.சனத்

கோல் பேஸ்' வருவார்கள், கொடிகளைத் தூக்கிப் பிடித்து, 'கோ ஹோம் கோத்தா' என்று கோஷம் எழுப்புவார்கள், ஓயமாட்டோமென கூளுரைப்பார்கள், 'செல்பி' எடுத்து மகிழ்வார்கள், படங்களை வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்து பரவசம் அடைவார்கள், பொழுது சாய்ந்ததும் சென்றுவிடுவார்கள், நாமோ வென்றுவிடலாம்"

காலி முகத்திடலில் ஆரம்பமான தன்னெழுச்சியான மக்கள் போராட்டம் குறித்த அதிகார வர்க்கத்தின் ஏகோபித்த எதிர்ப்பார்ப்பு, மதிப்பீடு, ஒப்பீடு இவ்வாறுதான் அமைந்திருந்தது எனலாம்.

ஆனாலும் அதிகார வர்க்கத்தின் 'சிற்றின்ப' மதிப்பீடுகளையெல்லாம் சின்னாபின்னமாக்கும் வகையில், நாம் பொழுதை போக்க வந்தவர்கள் அல்லர், பொழுது சாய்ந்ததும் செல்பவர்களும் அல்லர், இலக்கை அடையும்வரை 'இலங்கையர்களாக' களமாடுவோம் எனப் பொங்கியெழுந்து போராடிவருகின்றனர்.

அட! என்னவொரு திடமான சுய திட்டமிடல், உறுதியான ஒழுக்கமான ஒழுங்கமைப்பு, இலக்கை நோக்கிய நம்பிக்கைக்குரிய சுயவழிநடத்தல் என ஒட்டுமொத்த உலகினதும் கவனத்தை இப்போராட்டம் ஈர்த்துள்ளது. அதனால்தான் தாமாகவே வலிந்து வந்து, இளைஞர்களைப் பேச்சுக்கு அழைக்கும்நிலைகூட பிரதமருக்கு ஏற்பட்டுள்ளது.

பச்சிளம் குழந்தைகள் முதல் தள்ளாடும் முதியவர்கள்வரை பல்வேறு வயது கட்டமைப்பினரை போராட்டக்களத்தில் காணமுடிகின்றது. தூரதேசத்தில் இருப்பவர்கள்கூட, தமது குடும்ப உறுப்பினர்களைப் போராட்டக்களம் அனுப்பிவருகின்றனர். பல பெற்றோர் தாமாகவே முன்வந்து போர்க்களத்துக்கு அனுப்பி வைப்பதுபோல், ஆசிர்வதித்து, பிள்ளைகளைப் போராட்டக்களம் அனுப்பி வைக்கும் அளவுக்குத் தன்னெழுச்சிப் போராட்டத்துக்கு எட்டு திக்கில் இருந்தும் பேராதரவு வலுத்துள்ளது. இப்படியும் போராடலாம் என்ற புதிய போராட்ட அணுகுமுறையையும் இளைஞர்கள் கற்றுக்கொடுத்துள்ளனர்.

சிற்சில குறைபாடுகள் இருக்கலாம், ஒரு சிலருக்கு அரசியல் தேவைப்பாடுகள் இருக்கலாம், மேலும் சிலர் இதனை வைத்து வயிறு வளர்க்க முற்படலாம், அவற்றுக்கு எல்லாம் அப்பால் இனம், மத, மொழி, கட்சி பேதங்களுக்கு அப்பால் நாட்டு மக்கள் 'இலங்கையர்'களாக நாட்டின் எதிர்காலத்துக்காக அறவழியில் அணிதிரண்டிருப்பது வாழ்த்தி வரவேற்கக்கூடிய விடயமாகும்.




### போராட்டக் களத்தில் இருக்கும் தோழர்களுக்கு முன்மொழிவுகள்

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வீடு செல்லவேண்டும்' என்பது பிரதான இலக்கு. அவர் பதவி விலகாவிட்டால், பலந்தமாக வெளியேற்றவும் முடியாது. 'நிறைவேற்று அதிகாரம்' அவரைக் காக்கும். குற்றப்பிரேரணை ஊடாக அகற்றலாம். அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவு. காலம் எடுக்கலாம்.

எனவே, அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தை திருத்தி நாடாளுமன்றத்துக்கும் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். ஜனநாயக ஆட்சி இதன்மூலம் உறுதி செய்யப்படவேண்டும். அவசரமாக இது செய்யப்படவேண்டும். அதற்காக தமது மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

225 பேரும் வீடு செல்லவேண்டும் என்ற விடயத்துடன் உடன்பாடு கிடையாது. இந்த 225 பேரில் நாட்டுக்குத் தேவையான, நாட்டின் நலன், நமது நலன் பற்றி சிந்திப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். அடுத்த பொதுத்தேர்தலின்போது அவர்களை வீட்டுக்கு அனுப்புவதா?, சபைக்கு அனுப்புவதா? என்பதை தேர்ந்தெடுக்கும் உரிமை உங்களுக்கு தாமாக வந்துவிடும். பிரதான இரு கட்சிகளில் இருந்தும் தேசியப் பட்டியல் ஊடாக சபைக்கு வந்த சுமார் 15 பேர் பதவி விலகவேண்டும். நிபுணர்கள் 15 பேர் சபைக்கு வர வழிவகுக்கவேண்டும்.

புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் அமையும் இடைக்கால அரசின் அமைச்சரவையில் அந்த 15 பேருக்கும் முக்கிய பதவிகள் வழங்கப்படவேண்டும். 30 பேர் வேண்டாம். அமைச்சரவை எண்ணிக்கை 25 ஆக இருந்தால்போதும். மிகுதியுள்ள 10 அமைச்சுகளை கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வழங்கலாம்.

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தைக் கொண்டுவருவதற்கான விசேட சட்டம் இயற்றப்படவேண்டும்.

வெளிவிவகார பதவிகளில் உள்ள அரசியல் நியமனங்கள் இரத்து செய்யப்படவேண்டும். இராஜதந்திர நிபுணத்துவம் உள்ளவர்கள் நியமிக்கப்படவேண்டும். அப்போது சர்வதேச உதவிகளை இலகுவில் பெறலாம்.


அரச நிர்வாகக் கட்டமைப்பிலும் மாற்றம் வேண்டும். அரசியல் தலையீட்டுடனான உயர்பதவிகளுக்கான நியமனம் இரத்து செய்யப்படவேண்டும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான காணி உரிமை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம் போன்ற பணிகளையும் நிறைவேற்றலாம்.

புதிய அரசமைப்பு, அரசியல் தீர்வு உட்பட சில விடயங்கள் தற்போதைய நிலையில் சாத்தியம் இல்லை. அதற்கான உறுதிப்பாட்டைப் பெறலாம்.

## சிங்கள முற்போக்குவாதிகளின் சுயரூபம் வெளிப்படுகின்றதா?

அ.நிக்ஸன்




சிங்கள முற்போக்குவாதிகள், சிங்கள இடதுசாரிகள் அதாவது மிதவாதம் என்ற போர்வைக்குள் இருக்கும் சிங்களவர்களின் இரட்டை முகம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் அம்பலப்பட்டது.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பித்த ஜனாதிபதி கோத்தாவுக்கு எதிரான காலிமுகத் திடல் போராட்டத்தின் மூலம், மிதவாதச் சிங்களவர்களின் பௌத்த 'தேசிய' உணர்ச்சியும் அப்பட்டமாகவே வெளிப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத் ... பெற்ற மத்திய வங்கி நிதி மோசடி பற்றிய ... நடத்துவது போன்று காண்பித்து ... மறைத்துக் காப்பாற்றியது ராஜபக்ச அரசாங்கம்.

நிதி உள்ளிட்ட ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் என்பது இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து அநேகமான சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் உண்டு.

ஆகவே முப்பது ஆண்டுகால போரும் அதன் பின்னரான பன்னிரண்டு ஆண்டுகளில் வடக்கு கிழக்கில் இராணுவ மற்றும் சிங்கள மயமாக்கல் மற்றும் முஸ்லிம்களின் பொருளாதாரக் கட்டமைப்பு மீது நடத்தப்பட்ட இனவாதத் தாக்குதல்களே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்பது இயல்பாகவே வெளிப்படுகின்றது.

... இருந்து இரண்டாம் இடத்துக்குத் தள்ளியமை மற்றுமொரு காரணம்.

ஆகவே கோத்தாவுக்கு எதிராக ஆரம்பத்தில் தன்னெழுச்சியுடன் ஆரம்பித்த சிங்கள மக்களின் முதல் இரண்டு நாள் போராட்டத்திலும், இனரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகள், இறுதிப்போரின் வலிகள் ஆகியன வாய் திறந்து முதற்றடவையாகப் பேசப்பட்டன.

ஆனால் அந்தப் போராட்டத்தை மடைமாற்றித் தனியே கோத்தாபயவை ஜனதிபதிப் பதவியில் இருந்து மாற்றிவிட்டால் எல்லாமே சரியாகிவிடும் என்ற கருத்தைச் சிங்கள இளைஞர்களிடம் விதைத்தது யார்?


தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் இந்தச் சிங்கள முற்போக்குவாதிகள் என்று யாரும் கூறினால், அதற்கு மாற்றுக் கருத்தில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் தேவஸ்தானம்
# ண்டிலிப்பாய்
# வ சிறப்பிதழ் - 2022



ி அம்பாள் தேவஸ்தானம்





## பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில் வலிதென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயமாக பெரிதும் போற்றப்படுகின்ற சீரணி நாகபூசணி அம்மன் ஆயலமானது 2021ஆம் ஆண்டிற்கான (பிலவ வருட) மகோற்சவம் கடந்த 10.04.2021ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அன்னை வழிபாட்டிற்குரிய விசேட நாளான சித்திரா பௌர்ணமி தினமான இன்று தேர் ஏறி காட்சி கொடுத்து மக்களுக்கு அருளாசிகள் வழங்குகின்ற சிறப்பு நிகழ்வுக்காக வெளிவருகின்ற இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" எனும் சிறப்பிற்குரிய எங்கள் நாக பூசணி சக்தியானவள் தேர் ஏறிவரும் இன்றைய நந்நாளில் எமது பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற உயிர்கள் அனைவருக்கும் நல்லருளை வழங்கவேண்டும் என வேண்டி நிற்கின் றேன்.

எமது பிரதேச செயலகத்தில் நடைபெறும் எக்காரியமும் அன்னையின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்பது வழக்கம். இதனால் தங்குதடையின்றி வேலைகள் பூர்த்தியாக்கப்படுகின்றன. நயினாதீவுக்குப் போகமுடியாத பக்தர்கள் கூட இங்கு தங்கள் நேர்த்திக்கடனை பூர்த்தி செய்து பலன் பெறுகின்றமையினையும் காண முடிகின்றது.

மக்கள் அசாதாரண சூழ்நிலையில் இடர்பட்டுக்கொண்டிருக்கும் இந்நாளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மகோற்சவ திருவிழாக்களை முன்னெடுத்து வருகின்ற அறங்காவலர் சபையினர்களுக்கும் மற்றும் தொண்டர்கள். பக்தகோடிகள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து எல்லாம் வல்ல நாகபூசணித்தாயின் அருள் அனைவருக்கும் கிடைக்கப்பெற அன்னையை வேண்டி நிற்கின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**யசோதா உதயகுமார்,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், வலி தென் மேற்கு, சண்டிலிப்பாய்.**

## வாழ்த்துச் செய்தி



சண்டிலிப்பாய் மண்ணில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய இரதோற்சவ சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். பாரம்பரிய வரலாற்றினையும். பூர்வீகப் பெருமைகளையும் கொண்ட அம்பாள் ஆலயம் இயற்கைச் சூழலிலே அமர்ந்திருந்து மக்களுக்கு அருளாசி வழங்கி வருகின்றார். அம்பாளின் இரதோற்சவம் சிறப்புற எல்லாம் வல்ல நாகபூசணி அம்மனை வேண்டுகின்றேன்.

**அ. ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

## வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வட புலத்தின் யாழ்ப்பாண மண்ணில் சண்டிலிப் பாய் கிராமத்தின் அடையாளமாக நிமிர்ந்து நிற்கும் சீரணி நாகபூசணி அம்மன் இரதோற் சவ திருவிழா நன்னாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன். வர லாற்றுக்கு ம்ற்பட்ட தொன்மையும் அடியார் களுக்கு அள்ளி வழங்கும் தாய்மையுள்ளம் படைத்த நாகபூசணி அம்பாளின் அருளாசி உலகெங்கும் வாழும் இந்து மக்களுக்கு உரித்தாகட்டும். சித்திரை பௌர்ணமி நாளில் தேர்த்திருவிழா காணும் நாகபூசணி அம்மன் தீயவற்றை அழிக்கும் வகையில் கொடிய கொவிட் தொற்றிலிருந்தும் உலக மக்களை காப்பாற்றும் வண்ணம் வேண்டிநிற்கின்றோம்.

**கு.எழிற்செல்வன்**
**கிராம அலுவலர்,**
**J/143 சண்டிலிப்பாய் மேற்கு.**

வார்:


**K Food Land**
Seerani Junction,
Sandilipay
TP : 021 225 5140,
077 830 35408
**Jaffna Casa**
Hotel & Restaurant
AC, Non Ac Rooms

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
**ஆசைப்பிள்ளை & சன் நகை மாடம்**
**AASAIPILLAI & SON NAKAI MADDAM**
தங்கத்தை போன்றே தரம் மற்றும் நம்பிக்கையில் 100%
PROPRIETOR – A. KUNASEKARAM
T.P 021 225 2399
K.T Plazza,
Main Road, Chankanai
Rasapillai & Son Nagai Maddam

**AMBAL**
**RICE MILL**
**அம்பாள்**
அரிசி ஆலை
காரைநகர் வீதி,
சண்டிலிப்பாய்
Karainagar Road,
Sandilipay
T.P 072 7850550

**மணி அன் ஈசன் ஜுவெல்லறி**
**Mani & Easan Jewellery**
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
T.P : 021 7912677,
076 256 5272
இல. 02, நவீன சந்தை,
பிரதான வீதி, சங்கானை.

**லக்ஷ்மி புடைவையகம்**
**LUXMI TEXTILES**
No. 10,
Aalady Junction,
Manipay.
077 2391800

**City Motors Spot**
No 374, Kasthuriyar Road,
Jaffna.
சிற்றி மோட்டோர்ஸ் ஸ்பொட்
செகன்ட் கார்(ர்)ன்ட் பைக்சேல்ஸ்
Contact: 077 213 2456,
074 102 1459

**தரன் கல்லூரி**
மருதடிச்சந்தி,
மானிப்பாய்.
தரம் 06 முதல் O/L
A/L கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள்
யாழ் முன்னணி ஆசிரியர்களால் நடாத்தப்படுகிறது.

**சீரணி அம்பாள்**
மோட்டார் சைக்கிள் திருத்தகம்
சீரணி, சண்டிலிப்பாய்
Tel : 077 617 6572


**ஆலய பரிபாலன சபை**
**சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 05 . 1931 — இறப்பு 12 . 04 . 2022



### அமரர் முருகேசு வேலாயுதன் (JP)

(முன்னாள் மின்சார சபை உத்தியோகத்தர்)

"குமர பவனம்" தென்மயிலை தெல்லிப்பளையைப் பிறப்பிட மாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு வேலாயுதன் கடந்த (12.04.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு இரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பவானிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தயாளகுமார், நந்தகுமார் (பிரான்ஸ்), நரேஸ்குமார் (கனடா), செல்வக்குமார் (பிரித்தானியா), தவச்செல்வி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஷா, ரேணு, நிரஞ்சினி தேவி, எட்வேட்வின்சன் ஆகியோரின் மாமனாரும், டினக்ஷன், அனோர்திக்ஹ, ரோசான், நிஷான், நிர்வானா, சினேகா, கார்மேக வண்ணன், சுவேதனா, துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவக்கொழுந்து, பரமேஸ்வரி சிவப்பிரகாசம், பூமலர் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், பத்மாசனி குலசிங்கம் (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராயில் அவரது சகோதரியின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'உதயம்'
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்

தகவல்
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு

| | | | |
|---|---|---|---|
| நந்தகுமார் | 0033617766468 | தவச்செல்வி | 003369897677 |
| நரேஸ்குமார் | 0014165053141 | சிவப்பிரகாசம் | 0778851826 |
| செல்வக்குமார் | 00447511239917 | குணநேசன் | 0777989550 |

(CR 37848) (3/6)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
**திரு.எஸ்.ரி.குமரன்**
அவர்களின் அன்பு மாமனார்
**நடராசா மகாலிங்கம்**
அவர்கள் கடந்த (14.04.2022) வியாழக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்:- யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க கல்விமானுக்கு அஞ்சலி செலுத்த அழைக்கின்றோம்!



### அமரர் பேராசிரியர் ச.பாலகுமார்

(துறைத் தலைவர், உயிர் இரசாயனவியல் துறை
முன்னாள் பீடாதிபதி, மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கடந்த **(12.04.2022)** செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த **பேராசிரியர் ச.பாலகுமார்** அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் **17.04.2022** ஞாயிற்றுக் கிழமை காலை **11.00** மணிக்கு **மருத்துவபீட கூவர் கலையரங்கில்** நடைபெறவுள்ளது.

பேராசிரியரின் நேயத்துக்குரிய நண்பர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், கல்விச் சமூகத்தினர், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் காலக்கனதி மிக்க இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்து **அமரர் பேராசிரியர் ச.பாலகுமாருக்கு** இறுதிவணக்கம் செலுத்த உரிமையுடன் அழைக்கின்றோம்.

(cr.37856) (2.6)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழக சமூகத்தினர்.

# பேராசிரியர் பாலகுமாருக்கு பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ச.பாலகுமாருக்கு அஞ்சலி நிகழ்வு நாளை முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பல்கலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வில் பேராசிரியரின் நண்பர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், கல்விச் சமூகத்தினர், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ம-14)

**சிறுநீரகம் தேவை**

O,B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
076 239 9874
(CS 19338) (4/6)

**காணிகள் விற்பனைக்கு**


கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 4 பரப்பும், கைதடி இலங்கைவங்கிக்கு அண்மையில் 18 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
(CS 19337) (4/6)
நேரடி விற்பனைக்கு மட்டும்: 077 601 1135

**விற்பனையாளர் தேவை**

திருநெல்வேலி பகுதியில் உள்ள எமது லொத்தர் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை.
(CS 19336) (4/6)
தொடர்பு: 077 078 2395

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 11 - 1966 — மறைவு 15 - 04 - 2022



### சங்கரப்பிள்ளை கெங்காதரன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.373, கரியாலை நாகபடுவான் முழங்காவிலை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கெங்காதரன் அவர்கள் நேற்று (15.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரியாலை நாதபடுவான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 432 9222,
077 503 8463

(CS 19340) (4/6)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 01 - 1933 — மறைவு 15 - 04 - 2022



### நடராசா சரஸ்வதி

அளவெட்டி வடக்கு முதலியார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா சரஸ்வதி அவர்கள் நேற்று (15.04.2022) வெள்ளிக்கிழமை காமைானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் தங்கச்சி அம்மா தம்பதிகளின் மருமகளும், சிறீஸ்கந்தராசா (மில் சிறி), கலைமதி மோகனராசா (France), நிர்மலாதேவி (U.K), நேசராசா (U.K), (Roshan Enterprice veg ltd), விமலா (U.K), நீதிராசா (JP VEG LTD -U.K), சோதிராசா (France) ஆகியோரின் தாயாரும், பரராஜசிங்கம், குமாரகுலசிங்கம் (U.K), சக்திவேல் (U.K), பத்மலீலாவதி, யசோ (France), கலைமகள் (U.K), பத்மயா (U.K), ஜெயந்தினி (India) ஆகியோரின் மாமியும், ராசாத்தி (அமரர்), சுப்பிரமணியம், சிந்தாமணி, நடராசா, செல்வரத்தினம், உருக்குமணி, விக்னேஷ்வரி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்), கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்சினி (L), அஸ்வினி, லவன் (L), கம்ஷா, கபிலன் (F), சஞ்ஜீப், சிந்து (F), சுரோமி (L), சாரு (F), கோபிகா (F), விஸ்னுயா (L), சிந்துவர்மன் (L), இந்துயா (L), பானுயா (L), றோசான் (U.K), அஜி (U.K), விதுஷான் (NR VEG LTD -UK), மகிழினி (U.K), அக்சயா (U.K), சந்தியா (U.K), கபிஷா (U.K), நிதுஷா (U.K), யதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் மற்றும் பூட்டப் பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் முதலியார் கோவிலடியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] 768 8833, 0033 769 299 079
0033 751 165 126, 077 454 6500,
077 037 7034

(CS 19339) (4/6)

தகவல்
குடும்பத்தினர்
(மில் சிறி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
21
.
11
.
1941



மறைவு
13
.
04
.
2022

## திருமதி ஞானேஸ்வரி சிவராசசிங்கம்

(ஓய்வுபெற்ற கிளி/பரந்தன் இந்து ம.வி ஆசிரியர், )

மீசாலையைப் பிறப்பிடமாகவும், இல.73, குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சிவராசசிங்கம் அவர்கள் கடந்த (13.04.2022) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் திரு. காசிநாதர் சிவராசசிங்கம் (சிவராசா) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா கண்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற காசிநாதர் பார்வதி தம்பதியரின் மருமகளும், நாகரத்தினம், ஸ்ரீகாந்தன், சிவபுத்திரன், சிவகுமாரன் ஆகியோரின் சகோதரியும், சிவஞானவதனி (ஆசிரிய ஆலோசகர் ஆங்கிலம்- தென்மராட்சி கல்வி வலயம்), சிவஞானசந்தன் (லண்டன்), சிவஞானசங்கர் (லண்டன்), சிவஞானவதனா (லண்டன்) (முன்னாள் கிளி/பரந்தன் இந்து ம.வி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.க.சிறீதரன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி ஊழியர் - ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்), விக்ரோறியா (லண்டன்), ஷீலா (லண்டன்), நந்தரூபன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீகார்த்திகன், ஸ்ரீகௌசினி, ஸ்ரீகௌசாயினி, நிலாணி, நிஷாந்தன், மனோஜ், சுமங்கலி, ஷிவாணி, ஷாளினி, நரூஷா, ஷரூஜன், நரூஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹைரோவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரக்கன் கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இல.73, குமரபுரம்**
**பரந்தன்**

**தகவல்:**
**கா. சிவராசசிங்கம் (கணவர்)**

(CS 19314) (4/6)

# மரண அறிவித்தல்



## பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார்

(துறைத்தலைவர் உயிர் இரசாயனவியற்துறை, முன்னாள் பீடாதிபதி யாழ்.மருத்துவபீடம் தலைவர், குலனைப்பிள்ளையார் ஆலயம் - நவிண்டில் )

நவிண்டில் கரணவாய் மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார் கடந்த (12.04.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை இராஜேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வரும், திருமதி V.அமிர்தகௌரி, வி.ஞானகௌரி, Eng.சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சட்டத்தரணி பிரியங்கா, தனுஜா, ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ருதியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகி நிறைவுற்று, பின்னர் பூதவுடல் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் கலையரங்கில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இமையாணன் உடுப்பிட்டி எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவிண்டில், கரணவாய் மத்தி,**
**கரவெட்டி.**

(CS 19314) (4/6)

**தகவல்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



(CR 37853) (3/6)

தோற்றம்
08.06.1932

மறைவு
12.04.2022

## திருமதி
## இராசம்மா முத்துத்தம்பி

கொடிகாமம், கண்டி வீதி, மடத்தடியைச் சேர்ந்த திருமதி இராசம்மா முத்துத்தம்பி அவர்கள் கடந்த (12.04.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சரஸ்வதிப்பிள்ளை, தவமணி, கதிரவேலு, கனகரத்தினம், இராசமணி, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலக்கொழுந்து (அச்சுவேலி), அமரர் தவமணி (Swiss), நவரத்தினம் (சிறுப்பிட்டி), நவநாதன் (கொடிகாமம்), சிவசோதி (கொடிகாமம்), நவசுதன் (France), சிவகௌரி (Germany), நவசீலன் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசமூர்த்தி (அச்சுவேலி), ஸ்ரீரங்கராஜா (Swiss), சத்தியதேவி (சிறுப்பிட்டி), சிவசோதி (கொடிகாமம்), யோகநாதன் (கொடிகாமம்), பூங்குழலி (France), ரவீந்திரநாதன் (Germany), சுமதி (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், கபிலன் & கஸ்தூரி (France), ருக்சன் & வேணுஷன் (Swiss), நிதர்சன் (UK), அமரர் நிரூபன் (சிறுப்பிட்டி), நிரோஜன் (சிறுப்பிட்டி), விதுஷன் (கொடிகாமம்), அபிராமி & சஜீவன் (கொடிகாமம்), ராகவி, ஜனனி & சுபந்தன் (France), ஆர்த்திகா, அபிலன், அபிநயா & அபிரா (Germany), துர்க்கா & கோபினா (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிறேமஸ்வரூபா, பிரஷாந்திவாஹினி, ஹரிணி, ஜெய்தேஷ், நட்சத்திரா, நிவேதன், நிஷ்விகா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொடிகாமம் கண்டி வீதி, மடத்தடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 07:00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி, முற்பகல் 10.00 மணியளவில் கொடிகாமம் வேவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| நவரத்தினம் (மகன்) | +94 776424756 |
| நவநாதன் (மகன்) | +94 776133452 |
| கணேசமூர்த்தி (மருமகன்) | +94 774248761 |
| யோகநாதன் (மருமகன்) | +94 762252630 |

**தகவல்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28 . 07 . 1943



மறைவு
16 . 03 . 2022

## அமரர் திருமதி
## வேதநாயகம் செந்திநாதன்

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
மாசற்ற மணி விளக்காய்
நீங்கள் வீற்றிருந்த அன்பு ஆலயம்
இன்று வெறிச்சோடிப் போனதம்மா
உங்கள் நினைவுகள் தான் எமக்கு
இனி சொந்தம் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சிவபூதவராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(CS 19307) (3/6)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 04 . 1934



இறப்பு
14 . 04 . 2022

## திருமதி பூரணம் சிவசுப்பிரமணியம்

யாழ். புலோலி தெற்கு முத்து வாசாலவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பூரணம் சிவசுப்பிர மணியம் கடந்த (14.04.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தங்கச்சியம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும், வல்லிபுரம் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி). அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற பேராசிரியர் பாலகிருஷ்ணன் (முன்னாள் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி) மற்றும் காலஞ்சென்ற கனகநாயகம் (தேசிய திரைப்பட கூட்டுத்தாபன அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரஞ்சனா (ஆசிரியை - அவுஸ்திரேலியா), Dr.பூபாலன் (மருத்துவர் - அவுஸ்திரேலியா), யமுனா (ஆசிரியை - மெதடிஸ்ட் பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலகுமார், கிருபாகரன் (ஆசிரியர் - வடமராட்சி மத்திய மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுஷன், கஜீவன், அஷ்விந்த் . ரூபன் பாரதி மற்றும் அனிஷா ரோஸ் ஆகியோரின் அன்புக்குரிய பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.04.2022 அன்று புலோலி தெற்கில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
யாமுனா கிருபாகரன்
(மகள் + 94 (0)773 645 719

142, கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

(2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 - 07 - 1930



மறைவு
11 - 04 - 2022

## திருமதி சிதம்பரம்மா நாகமணி

நெடுந்தீவு மேற்கு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம்மா நாகமணி அவர்கள் கடந்த (11.04.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தையலம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகமணி அவர்களின் அன்பு மனைவியும் புவிநாயகம் (ஓய்வு நிலை தொழிநுட்ப உத்தியோகத்தர்) நவநாயகம் (ஓய்வுநிலை ஊழியர் பிரதேச சபை - நெடுந்தீவு) சபாநாயகம் (ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்) குலநாயகி (பிரான்ஸ்) Dr யோகநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்திக்குமாரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) லோகேஸ்வரி, காலஞ்சென்ற குமுதினி (ஆசிரியர்) மற்றும் கஜேந்திரலிங்கம் (பிரான்ஸ்) மரகதமொழி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, குமாரசுவாமி, தனுக்கோடி, கோபாலப்பிள்ளை, பசுபதி, ஏகாம்பரம், பொன்னம்பலம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லாத்தைப்பிள்ளை, சின்னத்தங்கம், அடைகலம்மா, கமலா, மற்றும் தங்கம்மாவின் அன்பு மைத்துனியும் நிஷாந் (SLIIT) வைஷ்ணவி, (MIT தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) சாரங்கா (மருத்துவபீட இறுதியாண்டு மாணவி கொழும்பு பல்கலைக்கழகம்) மதுஷா (இரண்டாம் வருட போஷாக்கு பீட மாணவி வயம்ப, பல்கலைக்கழகம்) பகலவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் .

இல 19 , 2 ம் ஒழுங்கை , வைரவ கோவில் வீதி,
வைரவ புளியங்குளம் ,
வவுனியா

தகவல் :
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
நா.புவிநாயகம் (மகன்) 0777782052 நா.சபாநாயகம் (மகன்) 0770237593
நா . யோகநாயகம் (மகன்) 0762965999

# மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 08 . 1957



இறப்பு
13 . 04 . 2022

## சங்கரப்பிள்ளை சிவராச திருபுவனன் (புவனன்)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் Sevran France யை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவராச திருபுவனன் (புவனன்) கடந்த (13.04.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.சங்கரப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியரின் இளைய மகனும், பத்மநாதன் இராசபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஷாமினி அவர்களின் அன்புக் கணவரும், சுஜித், சாருங்கா, சுமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராகுலனின் அன்பு மாமனாரும், சிவராணி, சிவலோஜினி, சிவராஜினி, சிவராஜபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஷராஜா, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், மாசிலாமணி, ஜெயவனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் France இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஷாமினி + 33 66 390 9282
சிவலோஜினி 021 221 3641

(cr 37855)(2.6)

தகவல்:
சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### போராட்டக்களம்....

வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலிலேயே கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை முன்வைத் துள்ளது

'போராட்டக் களத்துக்கு அரசியல் கட்சிகள் வர வேண்டாம் என்று இளைஞர்கள் கூறியுள்ளனர். ஆகவே, வடக்கு, கிழக்கிலிருந்து இளைஞர்கள் அங்கு சென்று முழுமையான ஆதரவு வழங்க வேண்டும்.

எமது நிலைப்பாட்டை அங்கே தெரிவிக்க வேண்டும்' - என்று கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ-ம-22)

### யாழ்.நகரில்...

ரில் மாபெரும் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது .

காலி முகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராக கடந்த ஏழு நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

### பஸிலுக்கு...

பட்டுள்ளது.

பஸிலுக்குக் கொரோனாத் தொற்றிருப்பது நேற்று நண்பகல் உறுதிப்படுத்தப்பட்டது. அவர், தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

### ராஜபக்சக்கள்...

முன்வைக்கப்பட் டுள்ளன.

தமது ஐந்து அம்சக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத வரையில் போராட்டத்தை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்று இளைஞர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

**கோரிக்கைகள்**

- உடன் நடைமுறைக்குவரும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவிவிலக வேண்டும்.
- பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலாக நாடாளுமன்றத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் அனைத்து ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களும் பதவிவிலக வேண்டும்.
- அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதுடன் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள அத்தியாவசிய சேவைகள், ஏனைய துறைகளை மீட்டெடுத்தல் வேண்டும்.
- இடைக்கால அரசை அமைத்து ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள், ஏனைய அரசியல்வாதிகள் கொள்ளையடித்த நிதி மற்றும் சொத்துக்களைப் மீளப்பெறுவதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ஆறு மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும்.

என்பனவற்றையே தமது ஐந்து அம்சக் கோரிக்கைகளால் போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் போராட்டம் எவ்விதமான விட்டுக்கொடுப்பும் இல்லாமல் தொடரும் என்றும் இளைஞர்கள் அறிவித்துள்ளனர். (ம-22)

### முள்ளிவாய்க்கால்...

டும் என்று வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்புக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

தமிழினம் சிறீலங்கா அரசாலும் அதன் நேச நாசகார சக்திகளாலும் துடிக்கத் துடிக்க கொன்றொழிக்கப்பட்ட நாளை, மருந்தையும் உணவையும் தடை செய்து தமிழரைத் தலைவணங்க வைக்க முயன்று, அதில் தோற்றுப் போய் யுத்த சூனிய வலயங்களுள் மக்களை ஒன்றுகூட்டி உலகினால் மனித குலத்துக்கு ஒவ்வாததென தவிர்த்தொதுக்கப்பட்ட போர் முறைகளையும் கொடிய இரசாயன ஆயுதங்களையும் பயன்படுத்தி எம்மினத்தை கருவறுத்த நாளை, பேதங்கள் அனைத்தையும் தவிர்த்து, தமிழர்கள் என்கின்ற நிமிர்வுடன் ஒன்றிணைந்து நினைவேந்த அனைவரையும் பணிவுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்புக் குழு அழைத்து நிற்கின்றது.

இது தொடர்பான திட்டமிடல் கூட்டங்கள் எதிர்வரும் நாள்களில் இடம்பெறும்- என்றுள்ளது. (அ-ம-20)

### புதிய...

கத் தெரியவருகின்றது.

எனினும் அமைச்சர்களின் எண்ணிக்கையில் இழுபறி நிலையொன்று ஏற்பட்டுள்ளதாலேயே அதுகுறித்து உறுதியான முடிவை எடுக்க அரசாங்கம் தயங்குவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக அலி சப்ரி நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர், நீதியமைச்சர் பதவியை எவருக்கு வழங்குவது தொடர்பில் பாரதூரமான கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதுடன் நீதியமைச்சர் பதவியை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு வழங்க வேண்டும் என ஒரு தரப்பினர் ராஜபக்சக்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### இந்தியா..

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவுக்கு அகதிகளாகப் பலர் தப்பிச்செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறாக யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் இருந்து இந்தியாவுக்குச் செல்லமுற்பட்ட ஐந்து பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-27)

### கைவிசேடத்தால்...

பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுந்தினம் இரவு மட்டுவிலில் இடம்பெற்றுள்ளது. புலம்பெயர் நாட்டிலிருந்து வந்த நபரொருவர் வீட்டிலுள்ளவர்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டுக் கைவிசேடம் வழங்கியுள்ளார். இதைக் கேள்வியுற்று மதுபோதையில் சென்ற ஒருவர் தனக்கும் கைவிசேடம் வழங்குமாறு கோரியுள்ளார்.

அவ்வாறு சென்றவரிடம், நாளை காலையில் வருமாறு கைவிசேடம் கொடுத்தவர் தெரிவித்ததையடுத்து மதுபோதையில் இருந்தவர் அவர்மீது இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார். இதனால் கையில் காயமடைந்த குறித்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-9)

### ஈஸ்டர்...

னிட்டு, நாடெங்கிலும் உள்ள கத்தோலிக்க ஆலயங்களில் சிறப்பு ஆராதனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி புனித செபஸ்ரியார் தேவாலயத்திலும் முதன்மை ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. அன்றையதினம் காலை 8.45 மணிக்கு அனைத்துத் தேவாலயங்களிலும் ஆராதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டி தேவாலயத்திலிருந்து நீர்கொழும்பு கிறீன் பார்க் வரை அமைதிவழிப் பேரணியொன்றும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் இலங்கை கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது. (அ-ம)

### மீண்டும்...

டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கடந்த சில வாரங்களாக நாளாவிய ரீதியில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. எனினும் புத்தாண்டை முன்னிட்டு நேற்றுமுன்தினமும் நேற்றும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நிலையிலேயே மீண்டும் இன்றுமுதல் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றும் நாளையும் இரண்டரை மணிநேரம் பகலில் மாத்திரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### எரிபொருளுக்கு...

நிரப்பும் நடவடிக்கைகள் நேற்று நண்பகல் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய வரைமுறைகளின்படி மோட்டார் சைக்கிள்களுக்கு ஒரே தடவையில் அதிகபட்சமாக ஆயிரம் ரூபாவுக்கே பெற்றோல் நிரப்ப முடியும், முச்சக்கர வண்டிகளுக்கு ஆயிரத்து 500 ரூபா வரையும், கார் மற்றும் வான்களுக்கு 5 ஆயிரம் ரூபா வரையுமே ஒரே நேரத்தில் எரிபொருள் நிரப்ப முடியும்.

எனினும், பேருந்துகள், ஜீப்கள், வர்த்தக வாகனங்கள், அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனங்கள் என்பனவற்றுக்கு இந்த நடைமுறை பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### விபத்தில்...

ளானதில் அதில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குமுழமுனையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கோபிநாத் (வயது -44) என்பவரே உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த குடும்பத்தலைவர் தண்டுவானில் இருந்து முள்ளியவளை நோக்கி மோட்டார் சைக்கிளில் நேற்றுமுந்தினம் இரவு 10 மணியளவில் பயணித்துள்ளார்.

இதன்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வயல்கம்பிக் கட்டையில் மோதியுள்ளது. இதையடுத்து அதில் பயணித்த மேற்படி நபர் படுகாயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-19)

### நீர்வெறுப்பு...

ஒருவர் உயிரிழந்தார். அவர் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதமைதான் உயிரிழப்புக்கான காரணம் என்று சட்டமருத்துவ வல்லுநரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியைச் சேர்ந்த அந்தோனி ஆசைநாதன் (வயது 35) என்ற நபரே உயிரிழந்தார்.

2 மாதங்களுக்கு முன்பு பூனையும் அவருக்கு நகங்களால் கீறியுள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பருத்தித்துறையிலுள்ள சகோதரி வீட்டில் தங்கிருந்தபோது அவருக்கு நேற்றுமுன்தினம் இரவு திடீரென நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்பிறப்பாக்கிகளுக்கு எரிபொருள் விநியோகம்

சாவகச்சேரி, ஏப். 16
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்பில் மின்சாரம் தடைப்படும் வேளைகளில் மின்பிறப்பாக்கிகள் பயன்படுத்தும் பொது அமைப்புகளுக்கு சங்க எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருகின்றது என்று சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதற்கமைய கோயில்கள், தனியார் மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள் ஆகியவற்றில் மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு எரிபொருள் தேவையெனில் கோரிக்கையை சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

மேலும் இந்தப் பகுதியில் இயங்கும் அரிசி ஆலைகள், தேங்காய் எண்ணெய் ஆலைகள் சிறுகைத்தொழில் நிலையங்கள், நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் மின்தடை ஏற்படும் வேளைகளில் பயன்படுத்தும் மின்பிறப்பாக்கிகளுக்குச் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் கோரிக்கைக்கு அமைய எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார். (ஓ-14,9)



## சென். நீக்கிலஸ் தேவாலயத்தில் பெரிய வெள்ளி கூட்டுத்திருப்பலி

யாழ்ப்பாணம், ஏப். 16
நாவாந்துறை சென். நீக்கிலஸ் தேவாலயத்தில் பெரிய வெள்ளி கூட்டுத்திருப்பலி நேற்று இடம்பெற்றது. கூட்டுத்திருப்பலியை பங்குமுதல்வர் அருட்பணி யேசுரட்ணம் அடிகளார் தலைமையிலான அருட்சகோதரர்கள் நடத்தினர். இதன்போது பல பாகங்களில் இருந்து வருகை தந்த கிறிஸ்தவர்கள் தமது பெரிய வெள்ளியின் தவக்கால கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். அத்துடன் கடந்த மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமான தவக்காலம் நாளை உயிர்த்த ஞாயிறு பெரும் கூட்டுத் திருப்பலியுடன் இனிதே நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14, 27)

## கல்வாரி திருத்தலத்தில் பெரிய வெள்ளி திருப்பலி



வவுனியா, ஏப். 16
கோமரசன்குளம் கல்வாரி திருத்தலத்தில் பெரிய வெள்ளி திருப்பலி நேற்று இடம்பெற்றது. இதன்போது இயேசுவின் திருப்பாடுகளை நினைவுகூரும் திருச்சிலுவைப் பாதை மக்களின் பங்குபற்றுதலோடு இடம்பெற்றது. கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி றொசான் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், கிறிஸ்தவ மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஓ-14)



மன்னார் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் நேற்று பெரிய வெள்ளி திருப்பலி இடம்பெற்றது. இதன்போது ஆலய பங்கு மக்கள் சிலுவையை சுமந்து சென்றனர். (ஓ-14,60)

## இரதோற்சவம்

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும் என்றும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

## நூல் வெளியீடு

நூலாசிரியர் சி.சிறீரங்கன் எழுதிய 'திக்கற்றவர்கள்' சிறுகதை நூல் வெளியீடு இன்று பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பஞ்சாட்சரம் கணேசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை வி.ஜெகந்நாதனும் கருத்துரையை வட கோவை வரதராஜனும் ஏற்புரையை நூலாசிரியர் சி சிறீரங்கனும் நிகழ்த்துவர். (ம-14,20)


## நன்றி தெரிவித்தல்

எமது சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற வணிகர்களுக்கு தற்போதைய எரிபொருள்களின் இக்கட்டான நிலையிலும் எரிபொருள்களை வழங்கிய சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க தலைவர், பொது முகாமையாளர், எரிபொருள் விற்பனை முகாமையாளர், பணியாளர்கள் அனைவருக்கும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர் / செயலாளர்
(CR 37851) (3/6) சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## தேவை

கிளிநொச்சியில் உள்ள பிரபல புடைவையகத்திற்கு முகாமையாளர், உதவியாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
(CS 19328) (3/6) தொடர்பு : 077 260 4233

## வீடு வாடகைக்கு

வவுனியாவில் அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம் அமைந்துள்ள வீடு உடனடியாக வாடகைக்குண்டு.
(cs 19321) (2/6)
077 884 9677

## பெண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் பெண் Cashier தேவை.
வயதெல்லை 18 - 35
(CS 19326) (3/6) தொடர்பு : 077 400 5023

## தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதியும், களஞ்சிய காப்பாளரும் தேவை. (வயது: 20 - 35)
யாழ்நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
076 139 4583 & 077 007 4903

## குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு, குளப்பிட்டிக் கருகாமையில் கே.கே.எஸ் வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் 10 அறைகள் கொண்ட, நவீன வசதிகளுடன் கூடிய, குளிரூட்டப்பட்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. நான்கு வாகனங்களுக்கான தரிப்பிட வசதிகள் உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
077 922 0735, 075 011 6283

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை வாமதேவா

5ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை வாமதேவா அவர்கள் நேற்று (15.04.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை விசாலாட்சி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பேரின்பநாதன், மகாதேவா, சரஸ்வதிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலாதேவி, தனலட்சுமி காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சிவறம்பியாவின் சித்தப்பாவும், காலஞ்சென்ற சதீஸ் மற்றும் தர்மினி, ராதிகா, றேனுகா, அமிதகலா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், இந்திரன், கங்காசுதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜனன், உமா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.04.2022) சனிக்கிழமை 2,2 எல்விற்றிக்கம மாவத்தை (Elvitigama Mawatta) கொழும்பு 08 இல் உள்ள சுப்பிரிமி (Supreme) மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூதவுடல் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு
077 635 2291, 076 964 3316 (CS 19332) (4/6)
தகவல்
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 17 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் தென்னைகள் உள்ளன.

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-
077 814 7389, 077 241 7589


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.